# 16-வது நிதிக்குழு அறிக்கை தமிழ்நாட்டுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது!

## நிதி நிலை அறிக்கை... 8 ஆம் பக்கத் தொடர்ச்சி

**மனிதவள மேலாண்மை**

156. கடந்த ஐந்து ஆண்டுகளில் அனைத்து அரசுத் துறைகள், கூட்டுறவு, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பணியிடங்களில், 1,55,131 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,55,977 கோடி ரூபாய் சம்பளம் மற்றும் ஓய்வூதியங்களுக்கான செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மக்கள் குறைதீர்ப்பு**

157.பொதுமக்களின் குறைகளுக்கு செவிமடுப்பதே சிறந்த நிர்வாகம் என்ற கொள்கையுடன் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. இந்தக் கொள்கையின் அடிப்படையில், பொதுமக்கள் அனைவரும் அரசு நிருவாகத்தை எளிதாக அணுக, பொதுமக்களுக்கான குறைதீர்வு அமைப்பாகச் செயல்படக்கூடிய **முதல்வரின் முகவரித் துறையை** இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ஏற்படுத்தியது. இவ்வரசு பொறுப்பேற்றதன்பின் ‘**மக்களுடன் முதல்வர்**’ என்ற சிறப்புத் திட்டத்தின் மூலம், மக்களின் குறைகளுக்கு உடனுக்குடன் தீர்வு ஏற்படுத்த மாநிலம் முழுவதும் 4,835 முகாம்கள் நடத்தப்பட்டு, 23.50 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டன. இத்திட்டத்தின் பெரும் வெற்றியைத் தொடர்ந்து, இந்தச் சேவையினை மேலும் வலுப்படுத்தி, அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கி, அவர்களுக்கு சேவைகளை வழங்கும் நோக்கில், இந்த அரசு ‘உங்களுடன் ஸ்டாலின்’ என்ற புதிய திட்டத்தை தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நகர்ப்புற, கிராமப்புறப் பகுதிகளில் 10,000 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் 38.53 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, 38.48 இலட்சம் மனுக்கள் இன்று வரை தீர்வு இறுதி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் அணுகுமுறையால், அரசின் நலத்திட்டங்களையும், சேவைகளையும் மக்கள் எளிதாகப் பெற முடிந்துள்ளது.

**சட்டம் ஒழுங்கு**

158. இந்த அரசு, மாநிலம் முழுவதும் சட்டம் ஒழுங்கு மற்றும் சமூக நல்லிணக்கத்தைப் பேணுவதற்கு அதிகபட்சம் முன்னுரிமையை அளிக்கிறது. இதன் விளைவாக, இந்தியாவின் மிகவும் அமைதியான மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

159. மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பினை மேலும் வலுப்படுத்தும் வகையில், கடந்த ஐந்தாண்டுகளில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம், 11,777 இரண்டாம் நிலை ஆண் காவலர்கள், 4,482 இரண்டாம் நிலை பெண் காவலர்கள், 839 ஆண் காவல் சார்பு ஆய்வாளர்கள், 220 பெண் காவல் சார்பு ஆய்வாளர்கள் என மொத்தம் 17,318 நபர்கள் காவல்துறைக்கு புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 2 புதிய காவல் ஆணையரகங்கள், 3 புதிய காவல் மாவட்டங்கள், 6 புதிய காவல் உட்கோட்டங்கள் மற்றும் 81 புதிய காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், தீவிரவாத தடுப்புக் குழு, சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் புதிதாக ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், சுற்றுக்காவல், போக்குவரத்து மேலாண்மை மற்றும் இதர காவல் பணிகளுக்காக கடந்த ஐந்து ஆண்டுகளில் 4,063 வாகனங்கள் 259 கோடி ரூபாய் செலவில் காவல்துறை பயன்பாட்டிற்காக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

160. சமூகத்தின் பொருளாதார ரீதியாக பலவீனமான மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களை பணக்கடன் வழங்கும் நிதி நிறுவனங்களின் வற்புறுத்தல் நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்க, **தமிழ்நாடு பணக்கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் (வற்புறுத்தல் நடவடிக்கைகளைத் தடுக்கும்) சட்டம், 2025** இயற்றப்பட்டு, இதற்கான விதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. பொருளாதாரக் குற்றங்களை, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கொண்டு வர 2025 ஆம் ஆண்டு உரிய சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

161. மாநிலம் முழுவதும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகில் அமைந்துள்ள மகளிர் காவல் நிலையங்களை எளிதில் அணுகும் வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் 43 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 80 புதிய **இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள்** அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. **2025 ஆம் ஆண்டு, பெண்ணிற்குத் துன்பம் விளை வித்தலைத் தடைசெய்கின்ற (திருத்தச்) சட்டத்தை** இந்த அரசு இயற்றியுள்ளது. இச்சட்டத்தின்படி, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை மற்றும் துன்புறுத்தல் குற்றங்களுக்கான தண்டனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பெண், நிர்வாக நடுவர் மூலம் குற்றவாளிகளிடமிருந்து உடனடி பாதுகாப்பைப் பெறவும், குற்றவாளி தொடர்பு கொள்வதைத் தடை செய்யவும் இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டம் இயற்றப்பட்டதன் மூலம், பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் 453 பாதுகாப்பு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பெண்களின் பாதுகாப்பிற்கான கண்காணிப்பை மேலும் மேம்படுத்த, சென்னை தாம்பரம், ஆவடி, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து நகரங்களுக்கு விரிவான சிசிடிவி கண்காணிப்புத் திட்டங்களுக்கு மொத்தம் 75 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. கல்லூரிகளில் படிக்கும் மாணவி யருக்கு வழிகாட்டுதல் மற்றும் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை வழங்குவதற்காக சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவின் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு பணிக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு பல்வேறு துறை பிரதிநிதிகளைக் கொண்டதாகவும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வழக்குகளை புலனாய்வு மற்றும் விசாரணையின் போது கண்காணித்து, அவர்களுக்குத் தேவையான ஆலோசனை மற்றும் மறுவாழ்வு உதவிகளை வழங்குகிறது.

162. இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு போதைப்பொருட்களுக்கு எதிராக கடுமையான சட்ட அமலாக்க நடவடிக்கைகள் மற்றும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வாயிலாக தேவை குறைப்பு (Demand Reduction) உள்ளிட்ட நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மாநிலம் முழுவதும் கடந்த ஐந்து ஆண்டுகளில் போதைப் பொருட்களுக்கு எதிராக 5.17 இலட்சம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் அதன் விழிப்புணர்விற்காக பல்வேறு துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த, ‘**போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு**’ என்ற இயக்கத்திற்கு ஒரு இயக்க மேலாண்மை அலகு உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் சுமார் 17,000 **போதைப்பொருள் எதிர்ப்பு மன்றங்கள்** உருவாக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் சிறந்த போதைப் பொருள் எதிர்ப்பு மன்றங்களுக்கு மாவட்ட மற்றும் மாநில அளவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும் கல்வி நிறுவனங்களில் போதைப்பொருள் பழக்கத் கண்காணித்து, அவர்களுக்குத் தேவையான ஆலோசனை மற்றும் மறுவாழ்வு உதவிகளை வழங்குகிறது.

162. இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு போதைப்பொருட்களுக்கு எதிராக கடுமையான சட்ட அமலாக்க நடவடிக்கைகள் மற்றும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வாயிலாக தேவை குறைப்பு (Demand Reduction) உள்ளிட்ட நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மாநிலம் முழுவதும் கடந்த ஐந்து ஆண்டுகளில் போதைப் பொருட்களுக்கு எதிராக 5.17 இலட்சம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டுள்ளன. போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் அதன் விழிப்பு ணர்விற்காக பல்வேறு துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த, ‘போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு’ என்ற இயக்கத்திற்கு ஒரு இயக்க மேலாண்மை அலகு உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் சுமார் 17,000 போதைப்பொருள் எதிர்ப்பு மன்றங்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் சிறந்த போதைப் பொருள் எதிர்ப்பு மன்றங்களுக்கு மாவட்ட மற்றும் மாநில அளவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும்




கல்வி நிறுவனங்களில் போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிரான தூதுவர்களாக செயல்பட, சுமார் 4 இலட்சம் மாணவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு. பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்கீழ், ஒவ்வொரு ஆண்டும் 80 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். போதைப் பொருள் பயன்பாட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குவதற்காக அரசு மருத்துவமனைகளில் 25 போதை மறுவாழ்வு மையங்கள் திறக்கப்பட்டு ள்ளன. போதைப் பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் ஆகியவை கிடைப்பது குறித்து புகார்களைத் தெரிவிக்க போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாட்டிற்கான அலைபேசிச் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, கல்வி நிறுவனங்க ளைச் சுற்றி போதைப் பொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்களின் விற்பனையைத் தடுக்கும் வகையில் சிறப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அதன் மூலம் அரசு கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளது. போதைப் பொருட்களைத் தடுக்க அரசின் கடுமையான நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த ஐந்து ஆண்டுகளில் 73,616 நபர்கள் கைது செய்யப்பட்டும், 8,949 வங்கிக் கணக்குகள் மற்றும் 21 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகள் முடக்கப்பட்டும் உள்ளன.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

163. ‘காக்கும் பணி எங்கள் பணி’ என்ற கொள்கையின் அடிப்படையில் இயங்கிவரும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, கடந்த ஐந்தாண்டுகளில் 1,10,836 தீவிபத்து அழைப்புகளிலும், 4,50,832 மீட்பு அழைப்புகளிலும் பணியாற்றி, 52,837 மனித உயிர்களையும், 2,898 கோடி ரூபாய் மதிப்புள்ள உடைமைகளையும் காப்பாற்றி உள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும், 281 கோடி ரூபாய் மதிப்பிலான தீயணைப்பு வாகனங்கள் மற்றும் தீயணைப்புப் பணியாளர்களின் பாதுகாப்புக் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில், 39 இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுவதற்காக 213 கோடி ரூபாய் அனுமதிக்கப் பட்டுள்ளது: 37 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளதுடன், 9 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் மேம்படுத்தப் பட்டுள்ளன.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் பயிற்சியினை மேம்படுத்தும் விதமாக, மாநில பயிற்சிக் கழகத்தை 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க ஒப்புதல் வழங்கப் பட்டு, அதற்கான கட்டுமானப் பணிகள் நடை பெற்று வருகின்றன.

## இடைக்கால நிதிநிலை அறிக்கையில்
## புதிய அறிவிப்புகள் வெளியிடுவது மரபு இல்லை!

தமிழ்நாடு அரசின் இடைக்கால நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை நேற்று (17.2.2026) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் வேளாண்மை, உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் தாக்கல் செய்தனர்.

பொதுவாக, இடைக்கால நிதிநிலை அறிக்கை என்பது அரசின் சாதனைகளை தெரிவிக்கும் அறிக்கையாக இருக்கும். மேலும், பல்வேறு துறைகளுக்குத் தேவைப்படும் இடைக்கால நிதிக்கு ஒப்புதல் கோரும் அறிக்கையாகவும் இருக்கும். இதுதான் இதுநாள் வரையில் கடைபிடிக்கப்பட்டு வரும் மரபாகும். எனவே, இடைக்கால நிதிநிலை அறிக்கையில், புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகள் வெளியிடுவது மரபு இல்லை.

**சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்**

164. சிறைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை உயர்த்துவதில், இந்த அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. தற்போதைய சூழ்நிலை களுக்கேற்பவும், சிறைவாசிகள் நலனைக் கருத்திற்கொண்டும், தற்போது கோயம்புத்தூரில் இயங்கி வரும் மத்திய சிறை மற்றும் பெண்கள் தனிச் சிறையினை 327 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இடமாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதே போன்று, மதுரை மத்திய சிறைச்சாலையை மாற்று இடத்தில் புதியதாக அமைப்பதற்கு 229 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் புதிய மாவட்ட சிறைச்சாலை வளாகங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைக்கு 15,111 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நீதி நிருவாகம்**

165. மக்கள் அனைவருக்கும் விரைவாக நீதி வழங்குவதை உறுதி செய்வதற்கு, நீதிமன்றங்க ளுக்குத் தேவையான கட்டடங்கள், மனிதவளம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்றித் தருவதற்கு இந்த அரசு உரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில், 25 சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட 82 நீதிம ன்றங்கள் 176 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளன. நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகள் குடியிருப்புகள், சட்ட அதிகாரிகள் வளாகம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளுக்காக, கடந்த ஐந்தாண்டுகளில் 1,118 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நீதி நிருவாகத்திற்கு 2,455 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பதிவுத் துறை**

166. அலுவலகத்திற்கு நேரில் வராமல் ஆவணப் பதிவு செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, ஆவணப் பதிவிற்கான மேம்பட்ட விரிவான இணைய தளம் **ஸ்டார் 3.0** (STAR 3.0) செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நவீன வசதிகளுடன் கூடிய மாதிரி சார்பதிவாளர் அலுவலகங்கள், சென்னை, அடையாறு மற்றும் பெரியமேடு பகுதிகளில் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

மேலும், 32 மாதிரி சார்பதிவாளர் அலுவலகங்களின் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**பேரிடர் மேலாண்மை**

167.காலநிலை மாற்றங்களால், கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து வரலாறு காணாத வகையில், குறுகிய நேரத்தில் பெய்யும் பெருமழை, புயல், பெருவெள்ளம் ஆகியவற்றை தமிழ்நாடு தொடர்ந்து சந்தித்து வருகிறது. இயற்கைப் பேரிடர் பாதிப்புகளிலிருந்து விரைந்து மீண்டு வருவதை உறுதிசெய்திட, அரசு நிர்வாகத்தை தயார்படுத்திடும் நடவடிக்கைகளில், இந்த அரசு கடந்த ஐந்தாண்டுகளில் பெருங்கவனம் செலுத்தியுள்ளது.

2021 ஆம் ஆண்டின் வெள்ளம், 2022 ஆம் ஆண்டின் மாண்டஸ் புயல், 2023 ஆம் ஆண்டின் இரட்டைப் பேரிடர்களான மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட பெருவெள்ளம், 2024 ஆம் ஆண்டின் கடுமையான ஃபெஞ்சல் புயல் மற்றும் 2025 ஆம் ஆண்டின் டித்வா புயல் ஆகியவற்றை இந்த அரசு திறம்படக் கையாண்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இப்பேரிடர் பாதிப்புகளுக்கு நிவாரண நிதியாக ஒன்றிய அரசிடம் 50,922 கோடி ரூபாய் கோரியும், 1,151 கோடி ரூபாய் அளவில் சொற்பமான நிதியை மட்டுமே ஒன்றிய அரசு வழங்கியுள்ளது.

168. வெப்ப அலையினை மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, முதற்கட்டமாக 11 மாநகராட்சிகளுக்கு தனித்தனியே வெப்ப அலை செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிலச்சரிவு அபாயங்களுக்கு உள்ளாகும் மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களுக்கான பேரிடர் தணிப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வறட்சி பாதிப்புக்கு உட்படும் மாவட்டங்களான விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உரிய வறட்சித் தணிப்பு நடவடிக்கைகள் 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

169.பேரிடர் அபாயத்தை திறம்பட மேலாண்மை செய்திடும் நோக்கத்தோடு, பெருநகர சென்னை மாநகராட்சிக்கான **நகர்ப்புறப் பேரிடர் மேலாண்மை ஆணையம்** (UDMA) உருவாக்கப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி, மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் கீழ், அதிநவீன வசதிகளுடன் கூடிய **தமிழ்நாடு மாநிலப் பேரிடர்** மேலாண்மை நிறுவனத்தை 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிவாரணப் பணிக்கான நேரத்தைக் குறைக்கவும், அத்தியாவசிய மீட்பு மற்றும் நிவாரணப் பொருட்களை பாதிப்பு ஏற்படும் இடங்களில் முன்கூட்டியே இருப்பு வைத்திருக்கவும், சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் மூன்று மண்டல மீட்பு மற்றும் நிவாரண மையங்கள் 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

170. கடந்த ஐந்து ஆண்டுகளில், ஒன்றிய அரசு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின்கீழ் தமிழ்நாட்டிற்கு 6,013 கோடி ரூபாயை மட்டுமே ஒதுக்கியது. ஆனால், தமிழ்நாடு அரசு 15,173 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில், பேரிடர் மேலாண்மைப் பணிகளுக்கென தமிழ்நாடு அரசு, கூடுதலாக 9,160 கோடி ரூபாய் நிதியை செலவிட்டுள்ளது.

**வணிகர் நலன்**

171. இந்த அரசு உறுதியளித்தபடி, பெட்ரோல் விலை லிட்டருக்கு மூன்று ரூபாய் குறையும் வகையில், பெட்ரோல் மீதான வரி 2021 ஆம் ஆண்டு முதல் குறைக்கப்பட்டது. வணிகர்கள் பயனடையும் வகையிலும் முந்தைய சட்டங்களின் கீழான வரி நிலுவைகளை வசூல் செய்திடவும் நடைமுறைப்படுத்தப்பட்ட **சமாதானத் திட்டத்தின் கீழ்**, 50,000 ரூபாய்க்கு மேல் நிலுவைத் தொகை இருந்த 13,118 இனங்களில் மொத்த கேட்புத் தொகையில் 772 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு, 250 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டு உள்ளது. இது கடந்த காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆறு சமாதானத் திட்டங்களுடன் ஒப்பிடுகையில், அதிகபட்ச வசூலான திட்டம் ஆகும்.

172 மே திங்கள் ஐந்தாம் நாள் ‘**வணிகர் தினம்**’ ஆக இந்த அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் மறைந்த உறுப்பினர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்ப நல உதவித் தொகை 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், அந்த வாரிய உறுப்பினர்களின் நலனுக்காக, திருமண உதவித்தொகையாக 10,000 ரூபாய் மற்றும் விபத்துக் கால இழப்பீட்டு உதவித் தொகையாக 25,000 ரூபாய் வழங்கும் இரு புதிய நலத் திட்டங்கள் நமது அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உறுப்பினர்களின் வணிகத் தலங்களில் ஏற்படும் தீ விபத்திற்கு வழங்கப்பட்டு வரும் இழப்பீட்டு உதவித்தொகை 20,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**நிதி மேலாண்மை**

173.ஒரு மாநிலத்தின் பரவலான வளர்ச்சிக்கு வலுவான கடன் பொருளாதாரம் மிகவும் அவசியமாகும். உரிய நேரத்தில், ஏற்கத்தக்க விகிதத்தில் கிடைத்திடும் கடன் உதவியைக் கொண்டு, மனித வளம் உலகெங்கும் செல்வச் செழிப்பை ஈட்டித் தந்திருக்கிறது. தமிழ்நாட்டின் கடன் பொருளாதாரமானது, மாநில அரசின் வரவுசெலவுத் திட்ட அளவைப் போல் ஏறத்தாழ மூன்று

மடங்கு பெரியது என்பதிலிருந்து, அதன் அளவு மற்றும் முக்கியத்துவத்தை நாம் அறியலாம். வளர்ச்சிக்கான ஒரு காரணியாக கடன் வசதி செயல்படுவதை உணர்ந்து, வரும் நிதியாண்டில் முன்னுரிமைத் துறை கடன்களுக்காக 11 இலட்சம் கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த உயரிய இலக்கினை உறுதியாக எய்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.




174.வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனில் உறுதிகொண்டுள்ள இந்த அரசு, மின்னணு கொள்முதல் இணையதளம், இணையவழி மின்னணு வங்கி உத்தரவாத முறை மற்றும் மின்னணு - ஒப்பந்ததாரர் பதிவு உள்ளிட்ட டிஜிட்டல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. 01.04.2023 முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ள மின்னணு- கொள்முதல் இணையதளத்தின் வாயிலாக, இதுவரை 4.13 இலட்சம் கொள்முதல் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இத்தகைய முன்முயற்சிகள், பொது ஒப்பந்தப்புள்ளிகளில் பொறுப்புடைமையை மேம்படுத்துவதோடு, ஒப்பந்தங்களை இறுதி செய்வதில் ஏற்படக்கூடிய காலதாமதத்தைக் குறைத்தும், அவற்றிற்கான நடைமுறைகளை எளிமையாக்கியும், பணிகள் நடைபெறுவதை எளிதாக்கியுள்ளன.

175.திறன்மிகு ரொக்கம் மற்றும் கடன் மேலாண்மையில் தான் பொறுப்பான நிதி மேலாண்மை தொடங்குகிறது என்ற உறுதியான கொள்கையின் அடிப்படையில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மாநிலம் முழுவதும் உள்ள வங்கிக் கணக்குகளில் பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடக்கும் ரொக்க இருப்புகளைக் கண்டறிய ஒரு சிறப்புப் பணிக்குமுவை அமைத்தது. இந்தப் பணிக்குழு, ஏறத்தாழ 10,86 இலட்சம் வங்கிக் கணக்குகளை ஆய்வு செய்து, 12,078 கோடி ரூபாய் நிதியை செயலற்ற நிதியாகக் கண்டறிந்தது. அத்தொகை, முக்கியமான உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சீர்திருத்த நடவடிக்கையின் தொடர்ச்சியாக, நிதி விடுவிப்பு உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்வதற்கான தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு பொது நிதி கண்காணிப்பு அமைப்பு, இறுதிப் பயனாளி வரை நிதி சென்றடைவதைக் கண்காணிக்க 32 துறைகளில் உள்ள 101 முக்கிய திட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள், திட்டங்கள் செயல்படுத்தப்படும் வேகத்திற்கு ஏற்ப, உரிய நேரத்தில் நிதி விடுவிக்கப்படுவதை ஒருங்கிணைப்பதோடு, அரசு திரட்டும் கடனை சரியாக திட்டமிடவும், அதன் மூலம் வட்டிச் செலவை கணிசமாகக் குறைத்திடவும் காரணமாக இருந்துள்ளன.

176. இந்த நேரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 55 ஆண்டுகளுக்கு முன் தொலைநோக்குப் பார்வையோடு 197172 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததை விரும்புகிறேன். இம்மன்றத்தில் பதிவு செய்திட “வரி விதிக்கும் உரிமை மத்திய அரசிடம் குவிந்து கிடக்கிறது; ஆனால், மக்கள் நலனைப் பேணிப் பெருக்குவதற்கான பெரும் பகுதிச் செலவை ஏற்கவேண்டிய பொறுப்பு மாநில அரசுகளிடம் நிறைந்து கிடக்கிறது. இவ்வாறு உரிமை ஒரு புறமும் கடமைப் பொறுப்பு மற்றொரு புறமும் இருக்கும்படியான விந்தை நிலைதான் நம்முடைய சிக்கல்கள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணமாகும். எனவே, நிதி வருவாயைப் பகிர்ந்து கொள்ளும் தற்போதைய முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். தேவை ஏற்படுமேல், இதன் பொருட்டு அரசியலமைப்புச் சட்டத்தையும் திருத்தியாக வேண்டும்” என முத்தமிழறிஞர் கலைஞர் கவலையோடு பதிவுசெய்த சூழல், அரைநூற்றாண்டுக் காலம் கழிந்த பிறகும் மாறவில்லை என்பது வருந்தத்தக்கது.

177.பதினாறாவது நிதிக்குழு அண்மையில் அதன் அறிக்கையை அளித்துள்ளது. அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை ஒன்றிய அரசு 01.02.2026 அன்று நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது. பதினாறாவது நிதிக்குழுவின் இந்த அறிக்கை, தமிழ்நாட்டிற்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. அனைத்து மாநிலங்களும், மத்திய வரிகளின் பகிர்ந்தளிக்கத்தக்க நிதியில் மாநிலங்களுக்கான பங்கை அதிகரிக்க வேண்டுமெனத் தெளிவாகக் கோரியிருந்த போதிலும், மாநிலங்களுக்கான பங்கானது 41 சதவீதமாகத் தொடர்வதாக நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. மேலும், மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள் விதிப்பு அதிகரித்துக்கொண்டே செல்வது குறித்து மாநில அரசுகள் முன்வைத்த கோரிக்கைகள் மீது நிதிக்குழுவின் அறிக்கையில் எந்தவிதமான பரிந்துரையும் இடம் பெறவில்லை என்பது வருந்தத்தக்கது.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

# தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசின் செயற்கையான நிதி நெருக்கடி!